**செய்தி வெளியீடு எண்: 587** **நாள் : 30.10.2013**

# தமிழ் வளர்ச்சித் துறை

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **14.5.2013** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரவை விதி எண். **110**–இன் கீழ் பின்வருமாறு அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> "வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ்மொழி பரவிட வகைசெய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் **'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது'** என்ற பெயரில் விருது வழங்கப்படும்''

இவ்விருது தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது [அரசாணை (நி) எண்.163, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ1–2) துறை, நாள்.5.7.2013].

விருது பெறுபவர்க்கு விருதுத் தொகை ரூ.1,00,000/–த்துடன் ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும். 2013ஆம் ஆண்டிற்கான விருது எதிர்வரும் சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு அன்று (14.4.2014) வழங்கப்படவுள்ளது.

போட்டிக்குரிய மென்பொருள்கள் 2010, 2011, 2012ஆம் ஆண்டுகளுக்குள் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது'-** 2013-ஆம் ஆண்டு போட்டிக்கான விண்ணப்பம், விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைதளத்தில் (**www.tamilvalarchithurai.org**) இலவசமாகப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விருதுக்கான விண்ணப்பம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் **31.12.2013**

**அனுப்ப வேண்டிய முகவரி**

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**